# DEPOSITION OF WITNESS
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 44/2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW13 , LW14**

| | |
|---|---|
| Name | திரு.அமல்ராஜ் |
| Father's/Husband Name | திரு.பென்னூர் |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 12th day of September, 2025**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

<u>முதல் விசாரணை</u>:-

நான் கடந்த 15.02.2016 ம் தேதி செய்யூர் காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். குற்ற எண்.1100/2014 வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 08.05.2016 ம் தேதி இவ்வழக்கின் 6 வது எதிரி தீனதயாளன் என்பவரை விசாரணைக்கு ஆஜராகி வேண்டி ஏற்கனவே 06.05.2016 ம் தேதி சம்மன் அனுப்பப்பட்டவர் நிலையம் ஆஜராகவில்லை. 16.08.2016 ம் தேதி மதுராந்தகம் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி செயலாளர் அவர்களை சந்தித்து முத்துசாமி முதலியார் மேற்படி வங்கியில் அடமானம் வைத்த அசல் ஆவணம் 1041/1960 பெறவேண்டி 6 வது எதிரி தீனதயாளன் முத்துசாமி முதலியாரின்

ஏஜெண்டாக நியமித்து போலியாக கொடுத்த அசல் வேண்டுகோள் கடிதத்தை பெற்றேன்.

2. மேலும் முத்துசாமி முதலியார் மேற்படி வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்தியது தொடர்பான ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்றேன்.எதிரி தீனதயாளன் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை ஆவணத்தையும் பெற்றேன். மேலும் அசல் ஆவணம் 1041/1960 ஐ அடமானம் வைத்து எழுதி கொடுத்த அடமான ஆவண எண்.370/1986 அசல் ஆவணம் மற்றும் வங்கியில் வாங்கிய கடனை திருப்பி செலுத்தியதற்கான டிஸ்சார்ஜ் சர்டிபிகேட் சான்றிட்ட நகல்களை பெற்றேன்.

3. 13.09.2016 ம் தேதி மதுராந்தகம் கூட்டுறவு வங்கி செயலாளர் திரு.வேதகிரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.12.2016 ம் தேதி மதுராந்தகம் கூட்டுறவு நிலவள வங்கியில் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு.ராமதாஸ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.12.2016 ம் தேதி சாட்சி சாந்தா அவர்களை குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 91ன் படி காவல் நிலையம் ஆஜராகி வேண்டி போலிஸ் சம்மன் அனுப்பினேன். **(அந்த சம்மன் அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 20.01.2017 ம் தேதி சாட்சிகள் சாந்தா, கருணாகரன், வசந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. 27.02.2017 ம் தேதி சாட்சி செய்யூர் காவல் நிலைய தலைமை காவலர் 1219 திரு.வேலாயுதம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.02.2017 ம் தேதி மதுராந்தகம் கூட்டுறவு ஊரக வளர்ச்சி வங்கியில் சம்பவ காலத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்த திரு.ஜோதி என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சி செல்வம் என்பவரை 30.1.2016 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. எனது விசாரணையில் இவ்வழக்கின் சட்ட பிரிவினை 120(B) , 465, 467, 468, 471, 420 r/w 34 IPC மற்றும் 419 IPC பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். **(அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. இத்துடன் விசாரணையை முடித்து எதிரி தீனதயாளன் என்பவர் மீது 420, 120(B), 465, 468, 471, 419 இ.த.ச.வில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் தயாராக இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.(FAC)